பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை என் பதிலின் அடிப்படையில் திரும்பப் பெற்றுக்கொண்டு நான் கோரியிருக்கிற மானியத்தை நிறைவேற்றித் தருமாறு தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது இப்பொழுது வாக்கெடுப்பு. திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோருடைய வெட்டு தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ரூ. 9,36,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

8. அறிவிப்பு.

தி. மு. க. உறுப்பினர்கள் அவைக்கு வராமலிருந்தல்—அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ''பிரதான எதிர்க்கட்சி அவைக்கு வரவில்லையே, அவர்களிடமிருந்து ஏதேனும் தகவல் உண்டா'' என்று கேட்டார். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரிடம் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது என்றும், இன்று 12 மணிக்குக் கட்சித் தலைவர்களைக் கூட்டி இது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் நான் தெரிவித்தேன். அதன்படி அலுவல் ஆய்வுக் குழு கூடியது.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாளன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சியில் எந்த ஒரு உறுப்பினரையும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டப்படவில்லை என்பதால் அன்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழு கூடி செய்த முடிவிற்கிணங்க இப்பிரச்சினையை எனது தனிப்பட்ட அதிகாரத்தை உபயோகித்து அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தேன். 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாளன்று ஆளும் கட்சி தரப்பில் இருந்தும், எதிர்க்கட்சி தரப்பில் இருந்தும் கொடுக்கப்பட்ட கடிதங்களை ஆய்வு செய்த பின்னர் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவையே பேரவைக்கு நான் அறிவித்தேன்.

நான் தனிப்பட்ட முறையில் உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவது என்பது பாராளுமன்ற மரபு அன்று. தீரவிசாரிக்காது எந்த உறுப்பினர் மீதும் அவை நடவடிக்கை எடுக்க இயலாது.

இதுபற்றி மேலும் இன்று அலுவல் ஆய்வுக் குழு கூடி ஒரு உறுப்பினர்மீது விசாரணையின்றி நடவடிக்கை எடுக்க இயலாது என்பதை ஏற்றுக்கொண்டு இப்பிரச்சினையை அவை உரிமைக்குழு ஆய்வு செய்து தனது அறிக்கையைக் கொடுத்தபின் முடிவு எடுக்கலாம் என்று தீர்மானித்தது.

இச்சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் சட்டப் பேரவையில் கலந்துகொள்ள வேண்டும் என்று இன்று அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொண்ட எல்லாக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த கருத்தை நான் அவை மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5—5—1981)ஆம் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

270. திருச்சிராப்பள்ளியிலுள்ள மத்திய சிறையில் ஆகஸ்ட் 1979 ஆம் ஆண்டு இறந்த இரண்டு ஆயுள் கைதிகளின் மறைவு குறித்து விசாரணை செய்வதற்காக, மதுரையிலுள்ள கூடுதல் மாவட்ட நீதிபதி திரு. எம். ஏ. முருகேசன் அவர்களைக் கொண்டு நியமிக்கப்பெற்ற தனி நபர் விசாரணைக் குழுவின் அறிக்கையும், அதன்மீது அரசு ஆணைகளும் [1952ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

186. கோரிக்கை எண் 23—கூட்டுறவு குறித்த கொள்கை விளக்க குறிப்பு, 1981—82 (தமிழ், ஆங்கிலம்).